பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**19 05 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி இத்தாலியில் அந்நாட்டுப் பிரதமர் திருமதி ஜார்ஜியா மெலோனியுடன் இன்று இருதரப்பு பேச்சு நடத்துகிறார்.

2. அணு ஆயுத அச்சுறுத்தலுக்கு இந்தியா அடிபணியாது என்று பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட நீதிபதிகள் விசாரணைக் குழு, தமது அறிக்கையை மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லாவிடம் சமர்ப்பித்துள்ளது.

4. காங்கோ நாட்டில் எபோலா வைரசால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தோர் எண்ணிக்கை 118ஆக அதிகரித்துள்ளது.

5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 18 வயதுக்குட்பட்டோருக்கான ஹாக்கிப் போட்டியின் 3வது ஆட்டத்தில் இந்தியா 6-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது 5 நாடுகள் பயணத்தின் இறுதிக்கட்டமாக இன்று இத்தாலி செல்கிறார்.

அங்கு அவர் இத்தாலி பிரதமர் திருமதி ஜார்ஜியா மெலோனியுடன் இருதரப்பு பேச்சு நடத்துகிறார்.

அந்நாட்டு அதிபர் திரு. **Sergio Mattarella**-வையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

கடல்சார் பாதுகாப்பு, போக்குவரத்து உள்ளிட்டவை குறித்து பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுகளில் பிரதமர் பங்கேற்க உள்ளார்.

இந்தியா - இத்தாலி இடையே வர்த்தகம் மற்றும் முதலீட்டை மேலும் ஊக்குவிக்கும் வகையில் வர்த்தக தலைவர்களுடன் திரு. மோடி விவாதிக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை இந்தியாவின் திறன், வலிமை மற்றும் நம்பிக்கைக்கான சான்றாக திகழ்கிறது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

வியட்நாம் தலைநகர் ஹனாயில் இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றிய அவர், அணு ஆயுத அச்சுறுத்தலுக்கு இந்தியா

அடிபணியாது என்றும், எந்தவொரு எதிர்த் தாக்குதலுக்கும் தக்க பதிலடி கொடுக்க தயாராக இருப்பதாகவும் கூறினார்.

செமிகண்டக்டர் துறையில் இந்தியா விரைவாக முன்னேறி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உலக அமைதி, வளர்ச்சி மற்றும் செழுமைக்காக இந்தியாவுடன் இணைந்து செயல்படுமாறு சர்வதேச சமூகத்திற்கு அவர் அழைப்பு விடுத்தார்.

நாட்டைக் கட்டமைப்பதற்கான பணிகளில் பங்கேற்குமாறு இந்திய வம்சாவளியினரை திரு. ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

கிழக்குப் பிராந்திய வேளாண் மாநாடு ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் இன்று நடைபெறுகிறது.

மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டில் மத்திய - மாநில அரசுகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவது குறித்தும், விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பது குறித்தும், வேளாண் துறையின் வளர்ச்சியை மேம்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் பல்வேறு திட்டங்களின் செயலாக்கம் குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

அத்துடன் தோட்டக்கலைத்துறையில் உள்ள வாய்ப்புகள், வேளாண் கடன் அட்டை தொடர்பான விவகாரங்கள் உள்ளிட்டவை தொடர்பாகவும் இந்த மாநாட்டில் விவாதங்கள் நடைபெற உள்ளது.

<<<<>>>>

தாய்லாந்து, ஈரான், நெதர்லாந்து, ஸ்வீடன், மொரீஷியஸ் நாடுகளின் சுகாதாரத்துறை அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா ஜெனிவாவில் சந்தித்துப் பேசினார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், டிஜிட்டல் சுகாதாரம், மருந்து உற்பத்தி, உலகளாவிய சுகாதார மேம்பாடு ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து தாம் அவர்களுடன் விவாதித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இச்சந்திப்பு புதுமைக் கண்டுபிடிப்பு, சுகாதாரத்துறையில் திறன் மேம்பாடு ஆகியவற்றில் இந்தியாவுடனான கூட்டாண்மை மேலும் வலுப்படுத்தியுள்ளதாக திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கோடைகால பயிர் சாகுபடி கடந்த ஆண்டு இதே காலகட்டத்தை ஒப்பிடும்போது சராசரியாக 3 புள்ளி பூஜ்ஜியம் 7 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதுகுறித்து மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பருப்பு வகைகள் 24 புள்ளி ஒன்பது ஏழு லட்சம் பரப்பளவிற்கும், சிறு தானியங்கள் 16 புள்ளி ஒரு லட்சம் ஹெக்டேர் பரப்பளவிற்கும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

அனைத்து பயிர்களும் நடப்பாண்டில் இதுவரை 83 புள்ளி பூஜ்ஜியம் 8 லட்சம் ஹெக்டேர் அளவிற்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட நீதிபதிகள் விசாரணைக் குழு, தமது அறிக்கையை மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லாவிடம் சமர்ப்பித்துள்ளது.

நீதிபதி விசாரணைக் குழு தலைவரும், உச்சநீதிமன்ற நீதிபதியுமான அரவிந்த் குமார், மும்பை உயர்நீதிமன்ற தலைமை

நீதிபதி திரு. சந்திரசேகர், கர்நாடக உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் திரு. B.V. Acharya ஆகியோர் இந்த அறிக்கையை சமர்ப்பித்தனர்.

இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ளது.

<<<<>>>>

நாட்டில் எபோலா வைரஸ் பாதிப்பு ஏதுமில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த வைரஸ் தொடர்பான பாதிப்பு இல்லை எனினும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கண்காணிப்பு மற்றும் தயார் நிலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பு எபோலா வைரஸ் தொடர்பாக பொது சுகாதார அவசர நிலையை அறிவித்ததைத் தொடர்ந்து மத்திய அரசு உன்னிப்பாக கவனித்து வருவதாக கூறப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ள காங்கோ மற்றும் உகாண்டாவில் இருந்து வரும் பயணிகள் கண்காணிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பொதுமக்களும், ஊடகங்களும் அச்சமடையவோ அல்லது தவறான தகவல்களைப் பரப்பவோ வேண்டாம் என்று சுகாதார அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

நாட்டின் பொது சுகாதார அமைப்பு எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள தயார் நிலையில் இருப்பதாக அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது.

சுகாதார அமைச்சகம் மற்றும் உலக சுகாதார அமைப்பு வெளியிடும் அதிகாரபூர்வ அறிவிப்புகளை கடைபிடிக்குமாறும் மக்களை சுகாதார அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

இந்திய குடிமைப் பணி முதல்நிலை தேர்வுக்குப் பின் விடைக்குறிப்பு வெளியிடப்படும் என்று மத்திய குடிமைப் பணியாளர் தேர்வாணைய தலைவர் டாக்டர் அஜய் குமார் தெரிவித்துள்ளார்.

தேர்வில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் முதல் முறையாக நடப்பாண்டு முதல்நிலைத் தேர்வு முடிந்தவுடன் தற்காலிக விடைக்குறிப்பு வெளியிடப்பட உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக முறையீடுகள் ஏதேனும் இருப்பின் இம்மாதம் **31**ஆம் தேதி வரை மத்திய குடிமைப் பணியாளர் தேர்வாணைய இணையதளத்தில் முறையிடலாம் என்று டாக்டர் அஜய் குமார் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சண்டிகரில் பெட்ரோல் மற்றும் டீசல் வாங்குவதற்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டுள்ளதாக சமூக வலைதளங்களில் பரவும் தகவல் தவறானது என்று பத்திரிகை தகவல் அலுவலகம் தெளிவுபடுத்தியுள்ளது.

சண்டிகரில் பெட்ரோல் மற்றும் டீசல் போதுமான அளவு கையிருப்பு உள்ளதாகவும், எரிபொருள் விற்பனையில் எந்த கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை என்றும் சண்டிகர் நிர்வாகம் தெரிவித்துள்ளதாக பத்திரிகை தகவல் அலுவலகம் கூறியுள்ளது.

<<<<>>>>

கம்போடியாவில் அதிக சம்பளத்திற்கு வேலை வாங்கித் தருவதாக பொய் வாக்குறுதிகளை அளித்து பணம் பெற்று மோசடி செய்ததாக தமிழகத்தில் மதுரையைச் சேர்ந்த ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

திருப்பத்தூரை சேர்ந்த பாதிக்கப்பட்ட ஒருவர் அளித்த புகாரின் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 3 ஆண்டுகளாக அவர் இந்த மோசடியில் ஈடுபட்டதும், நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்களை சட்டவிரோதமாக கம்போடியாவுக்கு அனுப்பி வைத்ததும் காவல்துறை விசாரணையில் தெரியவந்தது.

பின்னர் அந்த இளைஞர்கள் கம்போடியாவில் சைபர் குற்றத்தில் ஈடுபடும் கும்பலிடம் சேர்க்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் சென்னையில் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேசம் மற்றும் உத்தரப்பிரதேசத்தில் இன்று கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹரியானா, சண்டிகட், பஞ்சாப், ராஜஸ்தான், தெலங்கானா ஆகிய பகுதிகளிலும் வெப்பம் அதிகரித்துக் காணப்படும் என்று கூறியுள்ளது.

நாட்டின் வடமேற்குப் பகுதியில் அடுத்த 3 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக் கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே அந்தமான் நிகோபார் தீவுகள், கேரளம், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்காலின் சில பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்றும் கூறியுள்ளது.

ஆந்திரப்பிரதேசம், ஜம்மு-கஷ்மீர், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளம் ஆகிய பகுதிகளில் இடியுடன் கூடிய பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

காங்கோ நாட்டில் எபோலா வைரசால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தோர் எண்ணிக்கை 118ஆக அதிகரித்துள்ளது.

இடுரி மற்று வடக்கு கிவு மாகாணங்களில் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

சுமார் 300 பேருக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

காங்கோ நாட்டின் அண்டை நாடான உகாண்டாவில் எபோலா வைரஸ் தொற்று காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மற்றொருவரை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக ஒரு நிபுணர் குழுவை உலக சுகாதார அமைப்பு காங்கோ நாட்டிற்கு அனுப்பப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 18 வயதுக்குட்பட்டோருக்கான ஹாக்கிப் போட்டியின் 3வது ஆட்டத்தில் இந்தியா 6-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

போபாலில் நடைபெற்ற இப்போட்டியில் கேதன் குஷ்வாஹா 2 கோலும், ஆகாஷ்தீப், ஷாருக் அலி, ரோமித் பால், அன்ஷ் பஹுத்ரா ஆகியோர் தலா ஒரு கோலும் அடித்தனர்.

நான்கு போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வென்று சமநிலையில் உள்ளன.

4வது மற்றும் இறுதிப் போட்டி நாளை நடைபெற உள்ளது.

-------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்று பிளே ஆஃப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 180 ரன் எடுத்தது.

181 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஹைதராபாத், 19 ஓவரில் 5 விக்கெட்டுகளை இழந்து இலக்கை எட்டி வெற்றி பெற்றது.

ஜெய்ப்பூரில் இன்று நடைபெற உள்ள போட்டியில் ராஜஸ்தான் அணி லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

--------------

மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் ஹரிஹரன் அம்சகருணன் - எம்.ஆர். அர்ஜுன் இணை - ஃபிரான்ஸ் இணையை எதிர்கொள்கிறது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் **Ashwini Bhat - Shika Gautham** இணை - கனடா இணையை எதிர்கொள்கிறது.

--------------

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் கேரளா **2-1** என்ற கோல் கணக்கில் கோவா அணியை வென்றது.

**<<<<The End>>>>**